வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 094/ஆ5/2025, நாள்.28/05/2025
.....

பொருள் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பள்ளிச் செல்லாக் குழந்தைகள், DER மற்றும் DLMC (SMC) – மாவட்ட ஆட்சியர் தலைமையில் 29.05.2025 அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் கூட்டம் நடைபெறுதல் – கூட்டத்தில் தலைமையாசிரியர்கள் கலந்தக் கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க. எண். 859/மாஓ6/பமேகு/ஒபக /2024, நாள். 26.05.2025

.....

மதிப்பிற்குரிய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பள்ளிச் செல்லாக் குழந்தைகள், DER மற்றும் DLMC (SMC) குறித்து மே 2025 மாதத்திற்கான கூட்டம் 29.05.2025 அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 5–வது தளம், கூட்டம் அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்காணும்படி நடைபெறும் கூட்டத்தில் பொதுத் தேர்வு முடிவுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளாதால் அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள் கலந்துக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு வரும்போது இணைப்பில் கோரப்பட்டுள்ள விவரங்களை கொண்டு வருமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – விவரங்கள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
நகல் –
வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

ஆய்வுக் கூட்டத்திற்கு வரும்பொழுது தலைமையாசிரியர்கள் கொண்டு வர வேண்டிய விவரங்கள்-

1. பொதுத் தேர்வு 2025இல் தங்கள் பள்ளியில் 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பாடவாரியாக, வகுப்பு வாரியாக தேர்ச்சி சதவிகிதம் தொடர்பான விவரம்.
2. பொதுத் தேர்வு 2025இல் 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்வில் பங்கேற்றோர், தேர்ச்சி பெற்றோர், தேர்வில் தவறியவர்கள், தேர்வில் பங்கேற்காதவர்கள் விவரம்.
3. பொதுத் தேர்வு 2024 மற்றும் பொதுத் தேர்வு 2025 பாடவாரியாக, வகுப்பு வாரியாக தேர்ச்சி சதவிகிதம் மற்றும் ஒப்பீடு.
4. தேர்ச்சி சதவீதம் குறைந்ததற்கான காரணங்கள் தலைமையாசிரியரால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள்.
5. தேர்வில் தவறியோருக்கு நடைபெறுகின்ற சிறப்பு வகுப்புகள் தொடர்பான விவரங்கள்.
6. துணைத் தேர்வு 2025க்கு தங்கள் பள்ளியில் 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்வில் தவறியோர் மற்றும் தேர்வில் பங்கேற்காதோர் அனைவருக்கும் விண்ணப்பித்த விவரம். நிலுவை இருப்பின் இன்று உடனடியாக அதனை முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
7. கல்லூரி கனவு நிகழ்ச்சியில் தங்கள் பள்ளியிலிருந்து பங்கேற்க வேண்டியவர்களில் பங்கேற்காதோர் விவரம் மற்றும் அதற்குரிய காரணம்.
8. தங்கள் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பித்த விவரம்.
9. தங்கள் பள்ளியில் 10ஆம் வகுப்பு மற்றும 12ஆம் வகுப்பு பயின்று தேர்வில் தேர்ச்சி பெற்றோர் தவறியோர் பாலிடெக்னிக் மற்றும் ஐடிஐயில் (ITI) சேர விருப்பமுள்ள மாணவர்களின் விவரம்.
10. 2025-2026ஆம் கல்வியாண்டின் மாணவர் சேர்க்கை விவரம்.

(குறிப்பு - கூட்டத்திற்கு தலைமையாசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர் பொறுப்பில் உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். தவிர்க்க முடியாத சூழலில் உரிய அனுமதியின் பெயரில் விவரங்கள் தெரிந்த ஆசிரியர் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும்.)

28.05.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.